சர்க்கார் சேவகம்:

# "அன்றும் இன்றும்"

ஒரு சிறு நாடகம்

T12442
R003K06
T-12442

கதை வசனம்

'தம்பி'

(... காக மட்டும். விற்பனைக்கல்ல)

சர்க்கார் சேவகம்:

# "அன்றும் இன்றும்"

கதை வசனம்

## 'தம்பி'

[இந்நாடகத்தில் வரும் பாத்திரங்கள் எல்லாம் கற்பனையே; யாரையும் குறிப்பிடுவன அல்ல. இந்த நாடகம் நடிப்பதற்காகவே எழுதப்பட்டது; படிப்பதற்காக அல்ல. யாருடைய அனுமதியும் இல்லாமலே நடிக்கலாம்.]

வெளியிடுவோர்:

வட ஆர்க்காடு மாவட்ட வேலூர் சர்க்கார் சேவகர்கள் விளையாட்டு விழாக் குழுவினர்.

# நாடக பாத்திரங்கள்.

சண்முகம் பிள்ளை — வயதான உபாத்தியாயர்

தெய்வானை — சண்முகம்பிள்ளை மனைவி

கிருஷ்ண ராவ் — ரிட்டயர்டு தாசில்தார்

சுந்தரேசன், B. A. — சண்முகம்பிள்ளை குமாரன் ரிவினியூ டிபார்ட்மெண்டில் ரிவினியூ இன்ஸ்பெக்டராகச் சேர்ந்து படிப்படியாய்உயர்ந்து கலெக்டர்-ஆகிறவர் கதாநாயகர்

பார்வதி — தாசில்தார் சுந்தரேசன் மனைவி

ஹெட் அக்கவுண்டன்ட்
குமாஸ்தா
பியூன் பொன்னு
} எல்லோரும் தாலுக்கா ஆபீசில் வேலை பார்ப்பவர்கள்

சப் கலெக்டர் — வெள்ளைக்காரத்துரை

ஜோசப் — பட்லர்

ரிவினியூ இன்ஸ்பெக்டர்

கிராம முனிசீப்

N. G. O. சங்கக் காரியதரிசி
N. G. O. சங்க அங்கத்தினர்கள்
திரு மொகீந்தர்சிங் — சப் கலெக்டர்
சந்திரசேகரன் — சப் கலெக்டரின் நண்பர், சர்க்கார் உத்தியோகஸ்தர்
மனு கொடுக்கும் குடியானவர்சள்
ஜமாபந்தி மனுதாரர்கள் — பிரபல மிராசுதார் ரெட்டியார் — கிழவன் — கிழவி — ஹரிஜன் — மற்றவர்கள்.

## முப்பது வருஷங்களுக்கு முன்

## 1927-ல்

### காட்சி 1

இடம் :—உபாத்தியாயர் சண்முகம் பிள்ளை வீடு

காலம் :—காலை நேரம்

பாத்திரம் :—உபாத்தியாயர் சண்முகம் பிள்ளை — ரிட்டயர்ட் தாசில்தார் கிருஷ்ணராவ் — சண்முகம் பிள்ளை பையன் சுந்தரேசன் பி. ஏ.

---

சண்முகம் பிள்ளை :—வாங்க வாங்க ராயர்வாள் என்ன வீட்டில் எல்லோரும் சௌக்கியந்தானே ?.

கிருஷ்ணராவ் :—ஆமாம் எல்லோரும் சௌக்கியந்தான். என்ன உன் பையன் சுந்தரேசன் பி. ஏ. பாஸ் பண்ணி விட்டானாமே. ரொம்ப சந்தோஷம்.

சண். :—ஆமாம் எல்லாம் உங்கள் ஆசிர்வாதம்தான். பி. ஏ. I class லேயே பாஸ் பண்ணியிருக்கிறான்.

கிருஷ். :—என் ஆசிர்வாதம் என்னப்பா? உன் பையன் சோடையாய் இருப்பானா? நீ தான் இத்தனைவருஷங்களாக வாத்தியாராக இருந்திருக்கிறாயே; எத்தனையோ பையன் களை ஆளாக்கி பெரிய பெரிய உத்தியோகங்களில் அமர்த்தி யிருக்கிறாயே.

சண் :—என்ன யோங்க ; நல்ல வாத்தியார் பிழைப்பு. ஏணி தோணி நார்த்தங்காய் வாழ்வுதானே ? என்னிடம் படித் தவர்கள் எல்லாம் மேலே போய்விட்டார்கள். நான் மட்டும் இருந்தபடியே இருக்கிறேன்.

கிருஷ் :—அதனால் என்னப்பா ? இப்போ உன் பையன் படித்துப் பாஸ் பண்ணி விட்டான். அவனை மேல்க் கொண்டு என்ன செய்யப் போகிறாய்.

சண் :—என்ன செயய. ஏதோ எல். டி.க்கு அனுப்பலாம் இல்லை பி. எல். படிக்கவே அனுப்பலாமா ? என்று

யோசித்துக் கொண்டிருக்கிறேன் — எல்லாத்துக்கும் பணம் வேணும் — முப்பது வருஷம் வாத்தியார் வேலை பார்த்தும் மிச்சம் ஒண்ணும் இல்லை — இரண்டு பெண்களை கரையேற்ற முடிந்தது, இவனை படிக்க வைக்க முடிந்தது ; அவ்வளவுதான்.

கிருஷ் :—சரிதான் — போயும் போயும் உன் பையனையும் பழைய 'டாஞ' உத்தியோகத்திற்குத்தான் அனுப்ப உத்தேசமா? அது என்ன உத்தியோகம் நாலு காசு சேர்க்க வழியுண்டா ? கௌரவம் உண்டா ?

சண் :—அதற்கென்ன செய்கிறது — வக்கீலுக்கு அனுப்பலாம் அதற்கு முதலிலே பணம் வேண்டும் — அதன்பின் அதிர்ஷ்டம் வேண்டும். நமக்குத் தெரியாதா ? எல்லாருமா 'நார்ட்டாஞகி' விடுகிறார்கள் — எத்தனையோ பேர் ஜட்கா வண்டி சத்தத்திற்கே ததிங்கனதோம் போடுகிறார்களே.

கிருஷ் :—ஆமாம்ப்பா — வாத்தியார், வக்கீல் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிராதே — நல்ல பணம் கிணம் சம்பாதிக்கணும் என்றால் சர்க்கார் உத்தியோகத்திற்கு அனுப்பிவை — அதிலும் யார் காலையோ கையையோ பிடித்து ரிவினியூ டிப்பார்ட்மெண்டிலே சேர்த்து விடு — குமாஸ்தாவாகச் சேர்ந்தாலே போதும், விறு விறு என்று உத்தியோகத்தில் உயர்ந்து விடுவான்.

சண் :—எல்லாம் சேர்ந்த அனுபவத்தைச் சொல்லுகிறீர்கள் — எல்லோரும் உங்களைப்போல் தாசில்தாராகி விடுவார்களா? அதற்கு எவ்வளவு கெட்டிக்காரத்தனம் வேணும் — என்னுடன் படிக்கும்போது என்னவோ மக்காய்த்தான் இருந்தீர்கள் — இப்போது என்னடா என்றால் உங்கள்விட கெட்டிக்காரர்கள் இல்லை என்று பேச்சு — என்ன ஒரு லகாரமாவது சேர்த்திருப்பீர்காளா?

கிருஷ் :—லகாரமாவது — ரகாரமாவது — நான் இந்த டிபார்ட்மெண்டில் சேர்ந்த கதைதான் தெரியுமே — அங்கே முட்டி, இங்கே முட்டி ஒன்றுக்கும் வழியில்லாமல் இங்கே நுழைந்தேன். அந்த காலத்திலே மெட்ரிகுலேஷன் என்றாலே மதிப்புதான் — அப்படியும் 35 ரூபாய் சம்பளத்தில்தான் குமஸ்தா உத்தியோகத்தில்தான் சேர்ந்தேன்

[சண்முகம் பிள்ளையின் மனைவி வருகிறாள்]

தெய்வானை :—என்ன ராயர்வாள் எப்போது வந்தீர்கள் — இந்தப் பக்கமே காணோமே ?

சண் :—அவர் ரிட்டயர் ஆகிவிட்டாரே — அதனால்தான் ஓய்ச்சல் ஒழிவில்லாத வேலை — அன்றும் இப்படித்தான் இன்றும் இப்படித்தான் — கொஞ்சம் நல்ல காப்பியாய் கொண்டுவா

[உள்ளே சென்று காப்பி கொண்டு வருகிறாள்]

தெய்வானை :—சாப்பிடுங்கள். வீட்டில் எல்லோரும் சௌக்கியமா ?

கிருஷ் :—சௌக்கியமே — பையன் பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டான் என்று கேள்விபட்டேன் — சந்தோஷம் — அதற்காகவே இப்பக்கம் வந்தேன்.

தெய்வானை :—ஆமா ராயர்வாள் — எப்படியாவது அவனை உங்கள் டிப்பார்ட்மெண்டிலேயே சேர்த்து வேலையில் உயர்த்திடவேண்டும் — உங்க பிள்ளை குட்டிகள் எல்லாம் —

கிருஷ் :—இவன் என்னவோ எல்.டி , பி.எல். என்கிறானே

தெய்வானை :—எல்.டி., கீ.டி., எல்லாம் வேண்டாம் — இவர் ஒருத்தர் இத்தனை நாளா 'டான்' உத்தியோகம் பார்த்தது போதாதா? — என் பையனுக்கு அந்த உத்தியோகம் வேண்டவே வேண்டாம் — என் பையனுக்கு சர்க்கார் உத்தியோகம்தான் வேண்டும் — அரை ரூபாய் சம்பளமானாலும் அரண்மனை உத்தியோகமாயிருக்க வேண்டும் என்றுதானே சொல்கிறார்கள்.

கிருஷ் :—அதற்கென்ன அந்த உத்தியோகத்துக்கே போனால் போகிறது.

தெய்வானை :—ஆமா — உங்களைப்போல் தாசில்தாராகி உத்தியோகமே வாங்கிக்கொடுத்து விடுங்கள். நீங்கள்தான் ரிட்டயர் ஆகிவிட்டீர்களே ? உங்கள் வேலையே காலியாயிருக்குமே ?

சண் :—நல்லா சொன்னே. அவர் குமாஸ்தாவாகச் சேர்ந்து பத்து இருபது வருஷத்திலேதான் தாசில்தார் ஆகியிருக்காரு — அதற்குக்கூட தூக்கிவிட ஆட்கள்' இருந்தார்கள்

ராயரில்லே — சம்பளத்துக்கு சம்பளம் ; கிம்பளத்துக்கு கிம்பளம்.

கிருஷ் :—அதெல்லாம் இல்லே — இந்த டிப்பார்ட்மெண்டிற்கு திறமை கிறமை ஒன்றும் வேண்டாம் — மேலே இருக்கிறவர்களை சரியாய் காக்காய் பிடிக்கத் தெரிந்தால் போதும் — கேம்ப் வரும் கலெக்டர், சப் கலெக்டர்களுக்கு சரியாய் சப்ளை பண்ணத் தெரிந்தால் போதும்.

சண் :—அதைத்தான் அன்றே சொல்லியிருக்கிறார்களே — பழமொழியாக — கீழே யுள்ளவர்களைப் பார்த்துக் குரைக்கவும் — மேலே இருப்பவர்களை பார்த்து வாலைக் குழைக்கவும் தெரிந்தால் — நாயும் தாசில் பண்ணும் என்று — மன்னிச்சுக்கோங்க — உங்களை ஏதோ நாய் கீய் என்று சொல்லி விட்டேன்று —

கிருஷ :—என்னப்பா உன்னைத் தெரியாதா ? எனக்கென்ன கோபம் — உண்மையைத்தானே சொல்கிறாய் — சரி — உன் பையன் சுந்தரேசனை நல்ல உயர்ந்த நிலையில் பார்க்க வேண்டும் என்றால் நான் சொல்கிறபடி — சும்மா ரிவின்யூ டிப்பார்ட்மெண்டிலே சேர்த்து விடு — ஏதோ Pro R. I. வேலே கூட ஒன்று வருகிறதாம் — செரஸ்தாரைப் போய் பார் —செரஸ்தார் சொல்கிற இடத்தில் கலெக்டர் கையெழுத்துப்போட்டு விடுவார் — அந்தக் கலெக்டருக்கு என்ன தெரியும் ? — போகும் போது மட்டும் சும்மாப் போகாதே. ஒரு கூடைப் பழமாவது கொண்டு போ — நானும் சொல்லி வைக்கிறேன் — என்னிடம் வேலைப் பார்த்தவன்தானே அந்த சிரெஸ்தார்.

சண் :—சரி நீங்கள் சொன்னபடியே செய்கிறேன் தாங்கள் தான் உதவி செய்ய வேணும் — தங்களையுமே வந்து பார்க்கிறேன் வீட்டில் — சும்மா வர மாட்டேன் — ஒரு கூடைப்பழத்தோடேயே வருகிறேன்.

கிருஷ் :—அடேடே! உன் பையனே வந்து விட்டான் போலிருக்கிறதே. வாப்பா சுந்தரேசா உன்னைப்பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறோம். பி.ஏ. பாஸ் பண்ணி விட்டாயமே — Congratulations.

சுந்த :—நமஸ்காரம் சார் — எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்.

கிருஷ் :—சரி — நமஸ்காரமெல்லாம் இருக்கட்டும் — உன்னை எங்கள் ரிவின்யூ டிப்பார்ட்மெண்டிலேயே சேர்த்து விடலாமென்று பேசிக்கொண்டிருந்தேன் — உங்கப்பா சரின்னுர்.

சுந்த :—சரி சார் — அது என்ன டிப்பார்ட்மெண்டு — எப்போ பார்த்தாலும் கூழைக்கும்பிடு போட்டுக் கொண்டே வாழ்கிற டிப்பார்ட்மெண்டு. வேலை ரொம்பரொம்ப அதிகமாமே பெண்சாதி பிள்ளைகள் முகத்திலேயே விழிக்க முடியாதாமே? வேலைக்கு வேலையாய் இருக்கணும்—அத்தோடு மக்களுக்கு சேவை செய்கிறதாயும் இருக்கணும் — அப்படி ஒரு வேலைக்கு.

கிருஷ்:— அப்படின்னு வாத்தியார் வேலைதான்

தேவானை :—வாத்தியார் வேலைக்குத்தான் இப்போ கொஞ்சமும் மதிப்பு இல்லையே—ரிவின்யூ இன்ஸ்பெக்டர் இன்னு முன்சிப், கர்ணம், வெட்டியான், தலையாரி எததனையோ பேர் — கையைக் கட்டிக் கொண்டு நிப்பாங்க.

சண் :—தாசில்தார் இன்னு — இன்னும் மேலே பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் தேடிக்கிட்டு வருவாங்க — வீட்டிலே லக்ஷ்மி தாண்டவமாடுவா.

கிருஷ் :—ரொம்ப ஏண்டாப்பா — முதல்லே ரிவினியூ டிப்பாட் மெண்டிலே சேர்ந்துட்டே என்று தெரியட்டும் நான் நீ என்று பணக்காரர்கள் எல்லாம் பெண் கொடுக்கவே வருவாங்க — அழைப்பாங்க —

சுந்த :—அப்போ பெண் வேணும் — பொன் வேணும் மண் வேணும்னு ரிவின்யூ டிப்பார்ட்மெண்டிலேதான் சேரணும் என்று சொல்றீங்க

கிருஷ் :—ஆமாம்பா ஆமாம் — அப்படியே செய் எல்லாம் உங்கப்பாவிடம் சொல்லியிருக்கிறேன் — என்னுடைய பரிபூர்ண ஆசீர்வாதம் — கடவுள் உனக்கு எல்லா நன்மையும் தருவார்.

சண் :—கடவுள் எதுக்குங்க — அவரை ஏன் இழுக்கிறீங்க நீங்க இருக்கும்போது —

கிருஷ் :—நமஸ்காரம், நமஸ்காரம்.

சண் :—போய்வாருங்கள் — உங்கள் உதவியைமறக்கவே மாட்டேன் — (பையனும் கும்பிடுறான்.)

சுந்த :—நமஸ்காரம் — நமஸ்காரம்.

## பத்து வருஷங்கள் கழித்து

சுந்தரேசன் வேலையில் சேர்ந்து தாசில்தாராக உயர்ந்திருக்கிறார் — 1937-ல்

## காட்சி 2.

இடம்—தாலூகா கச்சேரி

காலம்:—மாலை 4-மணி

பாத்திரம்;—தாசில்தார்—பியூன் பொன்னு — ஹெட் அக்கவுண்ட்டண்டு குடியானவர்கள் 10 பேர்.

---

பியூன் பொன்னு:—எழுந்திருங்க — எல்லோரும் எழுந்திருங்க தாசில்தார் எஜமான் வருகிறார்— (எல்லோரும் எழுந்திருக்கிறார்கள்—தாசில்தார் திரு சுந்தரேசன் வந்து நாற்காலியில் அம கிறார்)

மனுதார் — மனுதார் —

(மனுக்களை மக்கள் கொடுக்கிறார்கள்—அவைகளை வாங்கி பியூன் கொண்டுவந்து தாசில்தாரிடம் நீட்டுகிறான்)

தாசில்தார்:—மனுக்களுக்கு என்னடா அவசாசம்—அதை எல்லாம் கட்டி அங்கே வை—இருக்கட்டும் ;

பியூன்:—இல்லை எஜமான் — காலையிலிருந்தே எல்லாரும் காத்திருக்கிறார்கள் இருட்டுவதற்குள்ளே அவரவர்கள் கிராமத்திற்கு திரும்பவேணும் என்கிறார்கள்.

தாசில்தார்:—யார் இவர்களை எல்லாம் காலையிலேயே வரச்சொன்னது—அவங்கள் என்ன மகாராஜாக்களோ—எதிர்கொண்டழைக்கணுமோ?

பியூன்:—இல்லை எஜமான்—

தாசில்:—என்னடா இல்லை—என்ன இவர்கள் எல்லாம் உனக்கு காசு கீசு கொடுத்திருக்கிறார்களா? இருக்கச சொல்—வேறு முக்கிய வேலை இருக்கிறது. அதைப் பார்த்து விட்டுத்தான் மற்றது—டேய்—இந்த ஹெட் அக் கவுண்டன்டைக் கூப்பிடு—

(பியூன் போகிறான் — ஹெட் அக்கவுண்டன்ட் ஓடோடி வருகிறார்)

ஹெட் அக்:—Good Morning Sir,

தாசில்:—என்ன ஸ்ரீனிவாசய்யர்—நம்ம ஜமாபந்தி எப்போது ஆரம்பிக்கிறது? இந்த சப் கலெக்டர் எப்போ வந்துதொலைகிறான்.

ஹெட்:—நாளைக் காலை 9 மணிக்கு. சப்கலெக்டர் ஆபீஸ் Staff எல்லாம் வந்து விட்டாங்க. சப் கலெக்டர் இன்று இரவு வருகிறார்:

தாசில்:—சரி — அப்படியே வந்து தொலையட்டும் — இந்த Staff க்கு எல்லாம் இருக்க இடம் சாப்பாடு எல்லாம் ஏற்பாடாகிவிட்டதா.

ஹெட்:—ஓ ஏற்பாடாகிவிட்டதே — நம்ப செட்டிசத்திரம்தான் ஏற்பாடு பண்ணியிருக்கோம்.

தாசில்.—ஏதோ சத்திரத்திலே சாப்பாடு என்று இருந்துவிடாதீர்கள்—எல்லாம் கன கச்சிதமாக இருக்கணும்-பார்த்துக் கொள்ளுங்கள்.

ஹெட்:—என்ன—எனக்கு தெரியாதா என்ன? கணக்கப்பிள்ளைகள் எல்லாம் ஜமா பந்திக்கு வந்து விட்டார்கள்—அதெல்லாம் மாமூலாய் நடக்கிறதுதானே. ஒழுங்காய் நடக்கும்.

தாசில்:—அதுக்கில்லை ஐயா, சப் கலெக்டருக்கு ஒன்றும் தெரியாது அவனை நான் சரிக்கட்டி விடுவேன்—இந்த Staff என்னுத்தையும் கன்னு பின்னுஎன்று எழுதிவைத்துவிடக் கூடாது பாருங்கள். பயல்களை எல்லாம் குஷிப்படுத்தி வையுங்கள்.

ஹெட் :—அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன் — உங்களுக்கு கொஞ்சமும் கவலே வேண்டாம்.

தாசில் :—(தபால்களைப் புரட்டுகிருர் – தபாலில் ஒரு காகிதத் தை எடுக்கிருர்)

அடே! இது என்னய்யா — இந்தப் பேப்பருக்கு Reply ஒரு வருஷமாகப் போகலே என்று கடுமையாக எழுதியிருக் கிருன் — ஏய் — இந்த Irrigation Clerk-ஐ கூப்பிடு.

பியூன் :—(போய் வந்து) அவர் இல்லீங்களே — காப்பி சாப் பிடப் போயிருக்கிருராம்.

தாசில் :—என்னடா அந்த தடியனுக்கு இதுதான் காப்பி சாப் பிடுகிற நேரமோ?

பியூன் :—(பழயபடியும் ஓடுகிருன் — சில நேரத்தில் Irrigation Clerk சோமு முதலியார் வருகிருர்)

தாசில் :—என்ன முதலியார் — இந்த பேப்பருக்கு reply போகலேயாமே — ஏன்? அது என்ன விஷயம்.

கிளர்க் :—(வாங்கிப் பேப்பரைப் பார்க்கிருன்)

இதுவா — நம்ப செண்பகராம நல்லூரிலே போன வரு ஷம் ஏரியிலே தண்ணீர் வரலே – ஆயக்கட்டிலே பாதிக்கு மேல் தரிசு — ஏதோ கொஞ்சம் கொஞ்சம் சாகுபடி பண் ணியிருந்ததும் காய்ஞ்சு போச்சு — அதற்கு கிராமத்தார் கள் வஜாக் கேட்டிருக்கிருர்கள்.

தாசில் ;—ஆமா வஜா மனு — போர்டுக்கு போவானேன் அந்த போர்டுகாரன்கள்பெரிய ரிப்போட் கேட்பானேன்.

கிளர்க் :—அதிலேதான் ஒரு சின்ன தப்பு நடந்திடுச்சு — அந்த ஏரியின் கீழ் உள்ள ஆயக்கட்டை சப் கலெக்டர் அய்மாஜ் பண்ணியிருக்கிருர் அவர் ஏதோ வயலிலே புல் முளைத் திருந்ததை எல்லாம் Paddy by Tank water என்று எழுதிவிட்டுப் போய்விட்டார் — இதை Overcome பண்ணுவதுதான் கஷ்டமாயிருக்கிறது ஏரிக்குப் போதிய சப்ளை வரலே — நெல் விதைக்கவே இல்லே.

தாசில் :—சரிதான் — புல்லுக்கும் நெல்லுக்கும் வித்தியாசம் தெரியாத பயல்கள் எல்லாம் சப் கலெக்டர் — இவர்களை

எவன் கட்டிக்கிட்டு மாரடிக்கிறது. இப்போ என்ன பண்றது.

கிளார்க் ;—அதுதான் எனக்கும் தெரியலே—கணக்கை திருத்த முடியாது —'கணக்கன் எழுதினதே கணக்கு — ஆதித்தன் உதிப்பதே கிழக்கு' என்பது பழமொழி—இந்த இழவு கேசிலே சப்கலெக்டரில்லே எழுதித் தொலேத்திருக்கிறுன்

தாசில் ;—அப்ப — ஒண்ணும் செய்யமுடியாது — வஜா கொடுக்க வேண்டியதில்லே என்று எழுதித் தொலேக்கிறது தானே.

க்ளார்க் :—எழுதலாம் — இந்த கலேக்டராபீஸ்காரன் பிடிச்சிக்கிடுவானே — ஆயிரம் கேள்வி கேட்பானே

தாசில்தார் :—அப்ப என்னதான் செய்கிறது?

கிளர்க் :—ஒண்ணு சப் கலேக்டரைக் காட்டிக் கொடுக்கணும் இல்லேன்னு — குடிகளுக்கு நாமம்போடணும் என்ன செய்கிறது?

தாசில் :—சப் கலேக்டரைக் காட்டிக் கொடுக்கிறதா—அது நடவாத காரியம் — இந்த வருஷம் எனக்கு புரோமோஷன் வரணுங்காணும், புரமொஷன் வரணும். அவன் எழுதினது தப்புண்ணு சொன்னும், தொலேஞ்சோம் நாம்.

கிளர்க் :—அப்ப என்ன செய்கிறது.

தாசில் :—புல்லெல்லாம் நெல்தான்! — மன்னன் வார்த்தைக்கு மறு வார்த்தை உண்டா — இந்த வருஷம் — இந்த இந்த ஊருக்கு வஜாக் கிடையாது என்று சொல்லிவிட வேண்டியதுதான்.

கிளர்க் :—அது நியாயமில்லேங்களே

தாசில் —நியாயம் நீதி எல்லாம் யாரையா பார்க்கச் சொன்னது நான் சொல்ற படி எழுது ஐயா

(இதற்குள் — வந்திருந்த குடியானவன் ஒருவன்)
எஜமான் — என் மனுவைப் பாருங்கள்

தாசில் :—என்னடா அவசரம் — இங்கு தலை போகிற காரியம் கவனிச்சிக்கிட்டுருக்கேன்.—இவன் வந்துட்டான் — சும்மா கிட —

[கிளர்க்கைப்பார்த்து] போமையா போம் நான் சொன்னபடியே எழுதிக்கிட்டு வாரும்.

பியூன் :—எஜமான் — டிபன் வந்து விட்டது. சாப்பிட்டுவிட்டு மற்ற வேலை பார்க்கலாம்

தாசில் :—ஆமா என்னைக்கும்தான் இந்த வேலை கிடக்கவே கிடக்கு

[எழுந்திருந்து டிபன் சாப்பிடப்போகிறார் — குடியானவர்கள் கச முச என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குடியானவன் :—என்னண்ணேன் — நாமோ காலையிலிருந்தே சாப்பிடலை — எஜமான் டிபனுக்குப் போய் விட்டார் — எப்போ வாருவாரோ ?

மற்றொரு குடியானவன் :—எய் அதையெல்லாம் பேசக் கூடாது நீயாவது இன்றைக்கு காலையிலே வந்தே — நான் நேற்றே வந்தில்ல காத்துக் கிடக்கிறேன்.

மற்றொரு குடியானவர் :—நான் வந்து எத்தனை நாளாச்சு தெரியுமில்லா — நாம் போன சந்தைக்கே வந்தவன் இன்னும் எஜமான் பேட்டி கிடைக்கலே.

[தாசில்தார் டிபன் சாப்பிட்டு விட்டு — படுத்து குராட்டை விட்டு எழுந்திருந்து வருகிறார்] வந்து

தாசில்தார் :—டேய் பொன்னு

இந்த மனுக்கொடுத்த பயல்களை எல்லாம் கூப்பிடு

[குடியானவர்கள் ஓடிவருகிறார்கள்]

ஒரு குடியானவன் :—எஜமான் — நான் குடியிருக்க மனை கேட்டு மனுப் போட்டு ஒருவருஷம் ஆகிவிட்டது — மனை கிடைக்கவே இல்லை — எனக்குப் பின் மனுப் போட்டவர்களுக்கு எல்லாம் கிடைத்துவிட்டது அதைக் கொஞ்சம் கவனிக்கணும் எஜமான்.

தாசில் ;—ஏன் அப்படி — நீ கிராம முனிசீப் கர்ணம் இவர்களை எல்லாம் சரியாய் பார்த்திருக்க மாட்டாய்.

குடிய னவன் ;—இல்லை எஜமான் ஒழுங்காய் வாரம் ஒரு முறை இல்ல சென்று கண்டிருக்கிறேன்.

தாசில் :—ஏய் சரியாய் கண்டுக்கிறது என்றால் வாரம் ஒருமுறை கண்டுகிறது இல்லை — பார்க்க வேண்டிய முறைப்படி பார்க்கிறது.

குடியானவர் ;—அப்படியும் கூடத்தான் கண்டுக்கிட்டிருக்கிறேனே. அதனாலும் மனம் இறங்க வில்லை.

தாசில் :—சரி — நம்மையும் சரியானபடி கண்டுக்கோ கவனிக்கிறேன் — அடுத்த ஆள்,

இரண்டாவது குடியானவன் :—எஜமான் - நான் மாட்டு வாரத்திற்கு மனுப்போட்டு ஆறு மாதம் ஆகிவிட்டது எஜமான். நடையா நடக்கிறேன் வாரகம் கிடைக்கவில்லை.

தாசில்தார் :—மனுப்போட்டு ஆறு மாசந்தானே ஆகிறது. ஆறு வருஷம் ஆனவர்களுக்கே இன்னும் கொடுக்கவில்லையே உனக்கென்ன அவசரம் சும்மாகிடபோ — பொன்னு! அடுத்த ஆள்.

மூன்றுவது குடி . :—எஜமான் — நான் கிணறு வெட்ட கடன் கேட்டு மனுப் போட்டேன் எஜமான் ஒரு வருஷம் ஆகிவிட்டது — பணம் வரும் என நம்பி கிணறு பாதிக்கு மேலே வெட்டி விட்டேன் எஜமான் — கொஞ்சம் சீக்கிறமே உத்திரவாக வேண்டும்.

தாசில்தார் ,—கிணறுதான் வெட்டியாய் விட்டதே இனி என்ன கடன் கொடுக்கிறது.

மூன்றுவது குடி. ,—இல்லை எஜமான் அப்படி சொல்லக்கூடாது அநியாய வட்டிக்கு கடன் வாங்கியல்ல வெட்டியிருக்கிறேன் அதனால்தான்

தாசில் ;—இங்கே கடன் என்றால் — வட்டி மாத்திரம் இல்லை வட்டிக்கு குட்டியுமல்ல சேர்த்துக்கொடுக்கனும்—போடா போ

டேய் பொன்னு — இன்னும் எத்தனை பேர் இருக்காங் களடா

பியூன் பொன்னு :—அது ஒரு அரை டஜன் பேர்கள் இருக்கிறார்கள்

தாசில் :—அவர்களை எல்லாம் பார்க்க நேரம் இல்லை. சப் கலெக்டரைச் சந்திக்கப் போகணும் — இன்னொருநாள் வரச் சொல்லு வண்டியை கட்டச்சொல் — [தாசில்தார் வண்டியில் எறிக் கொண்டு புறப்பட்டு விடுகிறார் — குடியானவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்.]

ஒரு குடி.—என்ன தாசில்தாரைப் பார்த்தீர்கள் அல்லவா.

அடுத்த குடி :—இல்லே பார்க்கலேயே

ஒரு குடி.—பார்த்தவர்களுக்கு என்ன பலன் கிடைத்துவிட்டது பாராததினால் என்ன குறைந்து விட்டது.

அடுத்த :— அப்படிச் சொல்லாதீர்கள் — ராஜா தரிசனம் என்றால் தெய்வ தரிசனம் அல்லவா

ஒரு குடி :—ஆம் தெய்வ தரிசனம் — கோயிலிலே சாமியும் கல்லாகத்தான் இருக்கிறார் — இந்த தாசில்தாரும் கல்லுப் பிள்ளையாராகவே இருக்கிறார் — என்ன செய்ய — சரி போய் வருவோம் வாங்க

மற்றொரு—இனி எப்போ கிடைக்குமோ எஜமான் தரிசனம் ;

[எல்லோரும் போகிறார்கள்]

---

## காட்சி 3

இடம் :—முசாபரி பங்களா

காலம் :—இரவு 8 மணி

பாத்திரம் .—தாசில்தார் — ரிவின்யூ இன்ஸ்பெக்டர் முன்சீப் — பட்லர் — சப் கலெக்டர் — துரைசாணி

---

[முசாபரி பங்களாவில் சப் கலெக்டர் முகாமுக்கு எல்லாம் ஏற்பாடாகி இருக்கிறது — பட்லர் முன்னமேயே

வந்து இருக்கிறான் — சப் கலெக்டர் வீர இல்லை — தாசில் தார் வண்டியில் வந்து இறங்குகிறார்.]

பட்லர் :—(தாசில்தாரைப் பார்த்து) குட் மார்னிங் சார் ! குட் மார்னிங் !!

தாசில் :—குட் ஈவினிங் ஜோசப் — என்ன துரை எப்போது வருகிறார்—துரை எல்லாம செள்க்கியந்தானு அவருடைய டைகருக்கு உடல் சரியில்லை என்று ஆஸ்பத்திரிக்கு எடுத் துக்கொண்டு போய் கொண்டிருந்தாரே — அதற்கு பூரண சுகம் ஆகிவிட்டதா ?

பட்லர் :—அதையேன் கேக்கிறீங்க — அந்த நாய்க்கு சொறி பிடித்தாலும் பிடித்தது — மனுஷன் எல்லோரையுமே சொறிந்து தள்ளிவிட்டான் — நாய் குலைக்கிறது பதிலாக அவனே குலைத்து விட்டான்.

தாசில் :—அப்படியெல்லாம் சொல்லாதே ஜோசப். துரை நல்ல வராயிற்றே.

பட்லர் :—நல்லவர்தான் — தன்னிடம் வாலைக்குழைத்துக் கொண்டு வருபவர்களுக்கு

தாசில் :—என்ன — உனக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் சரியாய் வந்து விட்டதல்லவா

பட்லர் :—வந்து விட்டது — ஒரு படி பால்தான் வந்திருக் கிறது. அது எப்படிக் காணும் ?

தாசில் :—இரவுக்கு மட்டும் ஒரு படி பாலா காணுதுங்கிறாய்.

பட்லர் :—மனிதன்மட்டும் பால் குடித்தால் போதும் தான் — இங்கே நாய், குரங்கு எல்லாமில்ல பால் குடிக்கிறது.

தாசில் :—சரி அதெதற்கென்ன இன்னும் ஒரு படி பால்

பட்லர் :—இனிமேல் எங்கே பால் வாங்கப் போகிறீர்கள் பால் வாங்குகிற பணத்தை என்னிடம் கொடுத்து விடுங்கள் — நான் வாங்குகிறேன் இல்லை சரிக் கட்டுகிறேன்

தாசில் :—சரிதான் — சரிதான் — மிஸ்டர் ரிவினியூ இன்ஸ் பெக்டர் — பணத்தை ஜோசப்பிடமே கொடுத்து விடய்யா

ரிவினியூ இன்ஸ்பெக்டர் :—*சரி சார் — [பணத்தை எடுத்துக் கொடுக்கிறார் பட்லர் — கோட்டுப் பையில் சொருகிக் கொள்கிறான்.]*

பட்லர் :—*நாளைக் கறிக்கு ஒரு டஜன் முட்டை. நாளை மத்தியானத்திற்கு இரண்டுகோழி. நாளை இரவிற்கு 10 பவுண்டு மீன்.*

தாசில் :—*முட்டை கோழிக் கெல்லாம் பஞ்சமே கிடையாது எந்தக்குடியானவன் வீட்டிலும் எடுத்து வந்து விடலாம் என்ன முன்சீப் ?*

முன்சீப் :—*அதெற்கென்ன எஜமான் — முட்டை ஒரு டஜன் என்ன பத்து டஜன் கொடுக்கிறேன் — கோழிக்கு என்ன பஞ்சம் — கோழியோ குஞ்சோ — எத்தனை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் — இந்த மீன்தான் இங்கே கிடைக்காது.*

தாசில் : —*என்ன முன்சீப் — நீர்தான் உம் வீட்டுக் கிணற்றில் போட்டு வளர்ப்பீரே.*

முன்சீப் :—*ஆமாம் — வளர்ப்பேன் — கிணற்றிலேதான் குடிக்கத் தண்ணீர் இல்லையே — ஏரி குளங்களிலும்தான் தான் தண்ணீர் இல்லையே.*

பட்லர் :—*துரைக்கு கிணற்று மீன் குளத்து மீன் எல்லாம் பிடிக்காது — நல்ல கடல் மீன்தான் உயர்ந்த சிலா ஆகத்தான் இருக்க வேண்டும்.*

முன்சீப் :—*ஆமா இந்த ஊரிலே கடல் மீனுக்கு எங்கேபோகிறது கடல் இருக்கிறது எழுபது எண்பது மைலுக்கு அப்பால்.*

பட்லர் :—*எண்பது என்ன எஜமான் எண்ணூறு மைலுக்கு அப்பாலிருந்தாலும் வந்துதானே ஆகணும*

தாசில் : —*ஆமா ஆமா முன்சீப் காட்டிக் கொடுத்திடாதேயும் என்னை — எப்படியும் மீன் வந்துவிடணும்.*

முன்சீப் :—*இதெல்லாம் முன்பே தெரிஞ்சு மூன்று நாளைக்கு முன்பே கடலூருக்கு ஆள் அனுப்பி விட்டேன் — நல்ல சிலாவாக வாங்கி — அதை ஐஸ் போட்டு கொண்டுவரச் சொல்லி — கொஞ்சமும் கவலை வேண்டாமுங்க எஜமான்.*

எப்படியும் உங்களுக்கு டிப்டி கலெக்டர் பிரமோஷன் கிடைத்தால் சரி.

தாசில் :—நம்ம முன்சீப் பலே கெட்டிக்காரர் — எவ்வளவு பெரிய பரம்பரை. பரம்பரை பரம்பரை ஆக அல்லவா அவர் இந்த சப்ளையில் பேர் வாங்கியவர்.

[முன்சீப்பிடம் — aside]

மீன் வாங்கிக் கொடுத்து மட்டும் பயனில்லை இந்த ஜோசப் பயலையும் கவனித்துக் கொள்ளும் — கவனிக்கலை குடியையே கெடுத்து விடுவான்.

முனிசீப் .—எனக்குத் தெரியாதா எஜமான் — அந்தப் பயலுக்கு ஒரு புட்டி வாங்கி கொடுத்து விட்டால் போதும் — சும்மா காலை சுத்திக்கிட்டே வருவான்

தாசில்.—ஆமா நீர் புட்டி என்றதும்தான் ஞாபகம்வருகிறது — துரைக்கு ?

முனிசீப் .—துரைக்கும் வருகிறது — பாண்டிச்சேரியிலிருந்து உயர்ந்த ரகமாகவே வரும் — இங்கே முகாம் என்றாலே அதற்குத்தானே வருவார்கள் சப்கலெக்டர்கள் — அதை யெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்

[இதற்குள் சப் கலெக்டர் வருகிறார் காரில் — காரி லிருந்தே — நாய் ஒன்றையும் தூக்கிக்கொண்டு இறங்கு கிறான் துரைசாணி — தாசில்தார் — அவர்களுக்கு மாலை அணிவிக்கிறார் மற்றவர்களும் அணிவிக்கிறார்கள்.]

*Sub Collector* :—Hullo Mr. Pillai. How do you do

*Tahsildar*.—Quite well sir, by your grace.

*Sub Collector* :—How is your Taluk? Have you had rains?

*Thasildar* :—No Sir, We had no rains for the last three months.

*Sub Collector* — Is it so? Then I think that the people must be suffering.

*Tahsildar* :—No Sir, They are not suffering. They are accustomed to this.

*Sub Collector* :—Then you say that there will be no remission of Land Revenue.

*Tahsildar* :—Yes Sir, I have not recommended any remission.

*Sub Collector* .—Very Good — Sundaresan.

Our Jamabandy begins tomorow at 9 a. m.

*Tahsildar* :—Yes Sir,

*Sub Collector* :—I cannot spend more time on that I will be going out for hunting. The entire Jamabandy must be over in half an hour—Do you understand ?

*Tahsildar* :—Very well sir, We have to settle accounts only for ten villages — We can get that done in ten minutes.

*Sub Collector* :—That is very good. Yes — Good bye! Good bye!

(உள்ளே போய்விடுகிறார்கள் துரையும் துரைசாணியும்)

தாசில் :—சரி நாமும் போவோம்—நாளை ஜமாபந்திக்கு வேண்டியதைக் கவனிப்போம்.

கிராம முன்சீப் :—துரை குஷியாகத்தான் இருக்கிறார்—எஜமானுக்கு புரோமோஷன் நிச்சயம்.

தாசில் :—எல்லாம் உம்மிடம்தான் இருக்கிறது. சப்ளையைக் சரியாய் கவனித்துக் கொள்ளும். நீர் குளிப்பாட்டறதிலே பிள்ளையாண்டான் உச்சி குளிரணும்.

கிராம முன்சீப் :—என்ன எஜமான்—எனக்குத் தெரியாதா?

---

## காட்சி—4.

இடம்:—முசாபரி பங்களா.

காலம்:—காலை 9-மணி.

பாத்திரம்:—சப் கலெக்டர்—தாசில்தார் ஹெட்கிளார்க்—பியூன் குடிகள் முதலானோர்,

---

(முசாபரி பங்களாவில் ஒரே கும்பல்)

தாசில்தார்:—சரி ஜமாபந்தி ஆரம்பிக்கும் நேரம் ஆகிவிட்டது சத்தம் போடாதீர்கள் (துரை வந்து விடுகிறார் — எல்லோரும் எழுந்து கும்பிடுகிறார்கள்.)

சப் கலெக்டர் :—குட்மார்னிங் சுந்தரேசன் — இஸ் எவரி திங் ரெடி.

தாசில் :—எஸ் ஸார்.

தாலுகா பியூன்:—நாட்டரும்பள்ளி — கிராம முன்சீப் — கர்ணம் தலையாரி — குடிகள் (மனுக்களை எல்லாம் கொண்டு வருகிறார்கள் குடியானவர்கள்.)

சப் கலெக்டர்:—Oh. So many petitions, Head Clerk! I have no time to look into this. Tell them that I am sending them all to the Tahsildar for disposal.

ஹெட் கிளர்க் :—துரை சொல்லுகிறார் — உங்கள் மனுக்களை எல்லாம் தாசில்தாருக்கு அனுப்புவதாக அவர் விசாரணை செய்து பைசல் பண்ணுவார்.

(பக்கமாக — குடியானவர்கள் — பண்ணுவார் பண்ணுவார் மனுஷனைப்பார்க்கவே முடிகிறதில்லை)

சப் கலெக்டர் :—[கணக்குகளில் கையெழுத்து செய்து விட்டு] (Next village–Hurry up please)

தாலுக்கா பியூன்:—அம்பலூர் கிராமம் — முனிசீப் கர்ணம் குடிகள்.

மனுக்கள் வந்து குவிக்கின்றன.

சப் கலெக்டர் :—Mr. Sundaresan! Collect all petitions from all the villagers and look into them at your leisure.

தாசில்தார்:—எஸ் சார் — ஏய் பொன்னு — எல்லா கிராமத்தாரிடமும் மனுக்களை எல்லாம் வாங்கிக் கட்டிவை.

குடியானவன்:—ஆம் எல்லாம் இனி அவிழ்க்காமலே இருந்துவிடும். இது என்ன ஜமாபந்தி? இதற்கு இத்தனை ஆடம்பரம்.

தாலுகா பியூன் :—சய்லன்ஸ் சய்லன்ஸ்—எல்லாரும் வெளியே போங்கள்.

சப் கலெக்டர் :—All the accounts are signed I think. I am starting for Javadi. And-body coming with me.

Tahsildar:—I shall accompany.

Sub Col :—No! No! You can't climb the Hill. Bring my horse. I shall go there on horse back. Dt. Forest Officer will be waiting for me at Andiappanur. Good bye—Good bye (starting)

தாசில்:—ஜமாமபந்தி என்றால் இதுதான் ஜமாபந்தி.

கி. மு:—எல்லாம் ராத்திரி நடந்த சப்ளை எஜமான் — நாளைக்கு எல்லாம் இவ்வளவு கெடுபிடி கூட இருக்காது. ஆள் தான் அப்படியே அசந்து கிடப்பானே — எல்லாம் பழண்டிசேரியில்ல,

தாசில்:—வெரி குட் முன்சீப் — வெரி குட்

[குடிகள் எல்லாம் முறைச்சிக் கொண்டே திரும்புகிறார்கள்].

## பத்து வருஷங்கள் கழித்து நாடு சுதந்திரம் பேறுகிறது 1947-ல்

காட்சி—5.

சுதந்திரதின விழா.

(1) பெண்கள் கும்மி.

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
பார்ப்பானை ஐயரென்ற [—ஆடுவோமே.
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரை என்ற
காலமும் போச்சே—பிச்சை
எற்பாறைப் பணிகின்ற
காலமும் போச்சே
ஏய்ப்போருக்கே சேவல் செய்யும்
காலமும் போச்சே —ஆடுவோமே.

எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமம் என்பது
உறுதியாச்சு
சங்குகொண்டே வெற்றி
ஊதுவோமே இதை
தரணிக் கெல்லாம் எடுத்து ஓதுவோமே

2. பாரதமாத திருவோலக்கம். [நடனம்]

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு

பாஞ்சாலம்:—

வீரத்திலே சிந்து தீரத்திலே—போரில்
வீறிட்டு எழுந்திடும் நாட்டினர்யாம்
பாரத்திலே புகழ் ஏறி சிறந்திடும்
பாஞ்சால நாட்டினுக்கீடுமுண்டோ —பாருக்

மாரத்தி:—

மேலை நிலத்தினர் மெச்சிப்புகழ்ந்திடும்
மேன்மை படைத்த துறைமுகமும்—மாலைப்
பரிதிக்குழம்பிற் குளித்திடும்
மாமலை மாராட்டம் என்னுடாம் —பாருக்

வங்காளி:—

பொங்கு திரைகளும் கொங்கு நுரைகளும்
பூக்களினங்களும் தாங்கிவரும்
கங்கை மகள் நடமாடி வரும்—எந்தன்
வங்கத்தின் தாய்க்கொரு ஈடுமுண்டோ —பாருக்

தமிழ்:—

கன்னித்தமிழ் இன்பாய்ச் சலோடு—வையை
காவிரி எல்லாம் புரண்டுவரும்
எண்ணத்தி திக்கும் தமிழ் நாடே புகழ்
ஏறிச்சிறந்திடும் எந்நாடாம் —பாருக்

எல்லோரும்:—

இந்து முஸ்ஸல்மான் கிறிஸ்தவரும் இன்னும்
எண்ணற்ற பிரிவுகள் இருந்தாலும்
சொந்த சகோதரர் போலவே நாற்பது
கோடி ஜனங்களும் கூடிடுவோம் —பாருக்

---

## காட்சி—6.

இடம்:—நடுத்தெருவில்

காலம்:—மாலை நேரம்

பாத்திரம்;—தாசில்தார் — சுந்தரேசன் — பழைய ரிட்டயர்டு தாசில்தார்—கிருஷ்ண ராவ்.

கிருஷ்ண ராவ்:—என்ன சுந்தரேசா சௌக்கியமா? எது சுதந்திர தின விழா எல்லாம் அமர்க்களப் படுகிறதே.

சுந்தரேசன்:—நமஸ்காரம் சார்—நமஸ்காரம்—நாடு சுதந்திரம் அடைகிறதுஎன்றால் அதை நாங்கள் என்ன? ஊரில்உள்ள மக்கள் எல்லாருமே அல்லவா கொண்டாடுகிறார்கள்.

கிருஷ்ண.—ஆமாம்ப்பா—இந்த சுதந்திரம் அடைவதால் உனக்கும் எனக்கும் என்ன லாபம் அப்பா.

சுந்தரே:—என்ன அப்படிச் சொல்விட்டீர்கள்—வெள்ளைக்கார துரைமார்களுக்கு சலாம் போட்டு சலாம் போட்டு எவ்வளவு அலுத்து விட்டது—நம் நாட்டில் உள்ளதை எல்லாம் சுரண்டிக்கொண்டு போய் விட்டாங்களே.

கிருஷ்:—என்ன நீ கூட இப்படி பேசுகிறாய் எல்லாம் அந்த மகாராஜன்கள் புண்ணியம்—நாம் படித்தோம்—பாஸ் செய்தோம் உத்தியோகம் ஏற்றோம்—அவன் தந்தி, தபால் ரோடு ரயில் எல்லாம் போட்டான்—மோட்டார் வந்தது பஸ் வந்தது ஏறிக்கொண்டு சவாரி செய்கிறோம்.

சுந்தரேசன்:—உங்கள் நினைப்பில் இந்த வெள்ளைக்காரன் வராவிட்டால் இத்தனையும் வராது, வந்திருக்காது என்று சொல்கிறீர்கள்—இது எல்லாம என்ன? சின்னக் காரியங்கள் சார்—நம்மை எல்லாம் அடிமைகளாக வைத்திருந்தே நமது ஆன்ம பலத்தையே போக்கிவிட்டான்களே.

கிருஷ் :—சரிதான் போ — வெள்ளைக்காரன் இருக்கிறவரை அவனுக்கு சலாம் போட்டாய் அவன் போனானே இல்லையோ காலை வாரி விடுகிறாயே — உனக்கு வேலை கொடுத்து தாசில்தார் வரை உயர்த்தியவனே அவன்தானுக்கும்.

சுந்த. :—வாஸ்தவம், வேலை கொடுத்தான், வேலையில் உயர்ந்தேன். — ஆனால் நமக்கெல்லாம் திறமைக்கு ஏற்ற வேலை கொடுத்தானா சார் — முதலில் உங்களைத்தான் எடுத்துக்கொள்வோம் — உங்களுக்கு உள்ள திறமைக்கு — டிப்டி கலெக்டர், கலெக்டர் வேலை எல்லாம் கொடுத்திருக்கலாம்.

கிருஷ். :—அதையேன் சொல்கிறாய் — அப்போதான் அந்த வேலையில் எல்லாம் — அந்தப் பயல்களே உட்கார்ந்து கொண்டார்களே — நமக்கு கொடுத்ததெல்லாம் இந்த

குமாஸ்தா உத்தியோகமும் இந்த தாசில் உத்தியோகமும் தானே.

சுந்த. :—இப்பத்தான் எல்லோரும் மூட்டை முடிச்சிக்களை எல்லாம் கட்டிக்கிட்டு கப்பலேறி விட்டார்களே - இனி நம்மை நாம் தானே ஆளவேண்டும்—பெரிய பெரிய உத்தியோகங்களை எல்லாம் நாம் தானே செய்ய வேண்டும்.

கிருஷ். :—என்ன சுந்தரேசா — உனக்கு உத்தியோக உயர்வு கிடைக்குமா ? டிப்டி கலெக்டர் ஆகிவிடுவாயா ? பாவம் உன் தகப்பனார் தான் இல்லே — நீ டிப்டி கலெக்டர் - ஆவதை எல்லாம் பார்க்க.

சுந்த. :—என்னமோ சார் உங்கள் ஆசி இருந்தால் எல்லாம் நடக்கிறது.

கிருஷ் :—ஒண்ணே ஒண்ணு அப்பா — உத்தியோகம் உயர்ந்து என்னப்பா ? கை நிறையச சம்பளம் வாங்கப்போகிறாயா ? இந்த காந்தி வந்துதான் எவருக்கும் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டாரே — வெள்ளைக்காரன் காலத்திலே ஐ. சி. எஸ் என்று வந்து விட்டால் ஆயிரம், இரண்டாயிரம் மூவாயிரம் என்றல்லவா சம்பளம் !

சுந்த. ;—ஆமா சார் வந்தவனும் சுரண்டினான் — வந்தவர்களுக்கு உதவியாக இருந்தவர்களுக்கும் சுரண்ட அனுமதி கொடுத்தான். நம் நாடு இருக்கிற நிலைமையில் ஒரு உத்தியோகஸ்தனது குடும்பத்திற்கு ரூ 500/-க்கு மேல் எதற்கு சார்.

கிருஷ். :—எய் எய், நீ கூட பெரிய காந்தி மாதிரி பேச ஆரம்பித்து விட்டாயே — உனக்குத் தெரியாது முன்பெல்லாம் சர்க்கார் அதிகாரி என்றால் அவன் வாங்குகிற சம்பளத்தை வைத்துத்தானே மதிப்பு — இனி அந்த மதிப்பு எல்லாம் எது — உனக்குத் தெரியாது — அந்தக் காலத்தில் நான் தாசில் பண்ணும் போது — நான் வண்டியில் புறப்பட்டு விட்டேனென்றால் தெருவில் உள்ளவர்கள் எல்லாம் உட்கார மாட்டார்கள் — நான் தெருவைக் கடக்கிறவரை எழுந்து நிற்பார்கள்.

சுந்த. :—இப்பத்தான் என்ன ! மக்கள் எல்லாம் சர்க்கார் அதிகாரிகளுக்கு மதிப்பு கொடுக்கலாமா இருக்கிறார்கள்.

கிருஷ். :—கொடுப்பார்கள் — கொடுப்பார்கள் — போகப் போகப்பார் இனி உன் தலை மேலேயே ஏறுவார்கள்.

சுந்த. :—ஆமா சார் — இனி நடக்க இருப்பது சர்க்கார் ஆட்சி இல்லையே — மக்களாட்சி, மக்களுக்காக ஆட்சி மக்களால் ஆட்சி சார்.

கிருஷ். :—ஏது ? — வெள்ளைக்காரன் கிட்ட படித்ததை எல்லாம் என்னிடமே காட்டுகிறாயே — எல்லாம் தான் பார்க்கப் போகிறேனே — எனக்கு வயதெல்லாம் எழுபத்தைந்தை தானே எட்டிக் கொண்டிருக்கிறது — இன்னும் ஒரு பத்து வருஷம் இந்த சுதந்திர ஆர்பாட்டத்தை எல்லாம் பார்த்து விட்டுத்தானே சாவேன்.

சுந்த. :—என் சார் — என்றும் சிரஞ்சீவியாகவே இருங்கள் — பாவம் — முப்பது வருஷ காலம் வெள்ளைக்காரர் ராஜ்ஜியத்தில் அதிகாரியாக இருந்து விட்டீர்கள் — நல்ல பென்ஷன் வருகிறது யார் யாருடைய முயற்சிலேயோ சுதந்திரம் வந்து விட்டது — நீங்களும் அந்த சுதந்திரத்தை அனுபவிக்கிறீர்கள் நானும் அனுபவிக்கிறேன் — மக்களும் அனுபவிக்கிறார்கள். ஏதோ நாமெல்லாம் பூரணமாக இந்த சுதந்திரத்தை அனுபவிக்க முடியாவிட்டாலும் அந்த காந்தி மகான் அருளினாலே நம் பிள்ளைகளாவது இந்த சுதந்திரத்தின் பலனை அனுபவிப்பார்கள் அல்லவா.

கிருஷ். :—ஏது எப்படியும் போகட்டும் — உனக்கு பதவி உயர்ந்தால் சரி — நீ டிப்டி கலெக்டர் ஆனால், இந்த கிருஷ்ணராவ் — நமக்கு முதல் முதலில் வேலை வாங்கிக் கொடுத்தவன் ஆயிற்றே என்று ஒரு கப் காப்பியாவது கொடுக்க மாட்டாயா.

சுந்த. :—ஆம் இந்த காப்பியைக்கூட அந்த வெள்ளைக்காரன் தானே கொண்டு வந்து நுழைத்து விட்டான். நாமெல்லாம் வெள்ளைக்காரன் தாசர்களாக இருப்பதை விட இந்த காப்பி தாசர்களாக அல்லவா ஆகிவிட்டோம் — சரி — வீட்டுக்கு வந்து ஒரு கப் சாப்பிட்டு விட்டு — போங்களேன்

[போகிறார்கள் இருவரும்]

காட்சி :— 7.

இடம் :—*தாசில்தார் வீடு*

காலம் :—*மாலை நேரம்.*

பாத்திரம் :—*தாசில்தார் —*

*தாசில்தார் மனைவி.*

சுந்தரேசன் :—*என்ன பார்வதி, பார்வதி — தந்தி வந்திருக்குதே பார்த்தாயா ?*

பார்வதி :—*என்ன தந்தி ? யாருக்குச் சுகமில்லை ? எங்க அப்பா அம்மா சுகந்தானே.*

சுந்த. :—போடி கர்நாடகம் — *தந்தி* என்றால் *துக்கசமாச்சாரம்* என்று நான் எண்ணிக் கொள்வதோ நல்ல செய்திடி — நல்ல செய்தி — என்னை அடோனிக்கு டிப்டி கலெக்டரா கப் போட்டிருக்கிறார்கள் — புரோமோஷன்டி — புரோ மோஷன்.

பார்வதி :—ஆமா — ஏன் இதற்கு இவ்வளவு அமர்க்களப்படுத் துகிறீர்கள்? இந்தக் காலத்தில் என்ன புரோமோஷன் வேண்டிக்கிடக்கு — அடோனி எங்கிருக்கு?

சுந்த. :—என்ன இப்படி பேசுகிறாய் — எவ்வளவு நாளாய் எதிர்பார்த்த புரமோஷன் —

பார்வதி :—ஆமா பெரிய புரமோஷன் — அடோனி எங்கிருக் கிறதென்றால்?

சுந்த. :—அடோனியா—வடக்கே பெல்லாரி ஜில்லாவில் இருக் கிறது இங்கிருந்து மூன்னூறு மைல்.

பார்வதி :—*சரியாய்ப்* போச்சு — அந்த உத்தியோகத்திற்கு மூட்டை முடிச்சு கட்டிக்கிட்டு மூந்நூறு மைல் போகனு மா? அதுவும் — நம்ம மனுஷாளே இல்லாத அந்த தூர தொலையில் உள்ள தெலுங்கு நாட்டுக்கா.

சுந்த. :—முதலிலே அப்படித்தான் போடுவார்கள் பின்னால் எப் படியும் நமது தமிழ் ஜில்லாக்களுக்கே வந்து விடலாம் — பெரிய உத்தியோகமடி.

பார்வதி :—என்ன பெரிய உத்தியோகமோ—அந்தக் காலத்தில் ரிவினியூ இன்ஸ்கபக்டருக்கு இருந்த மதிப்பு இப்போ டிப்டி கலெக்டருக்கு இல்லே — மதிப்பு தான் இல்லே — சம்பளமாவது உண்டா ?—அப்போது 45 ரூபாய் சம்பளத்தில் பத்து ரூபாய் மிச்சம் பிடிக்கலாம் — அதற்கு இரண்டு பட்டுப்புடவை வாங்கலாம் — இப்ப என்னடா என்றால் 250 ரூபாய் வீட்டுச் செலவுக்கே காணமாட்டேன் என்கிறது — விலைவாசி எல்லாம் ஏறிக்கிடக்கிறது ஏகத்தாளமாக. கடனுக்கு மேலே கடன் வாங்க வேண்டியிருக்கிறது.

சுந்த: :—ஆமாண்டி—இப்ப அமேடாளிக்குப் போகணுமே பணம் வேண்டுமே.

பார்வதி :—கடன் வாங்குங்கோ ; வாங்கிட்டுப் போய் வாருங்க.

சுந்த :—என்ன நீ வர்ரியா ?

பார்வதி :—நாளு ! நான் அங்கு வந்து என்ன செய்கிறது குழந்தை குட்டிகள் படிப்பு எல்லாம் என்ன ஆகிறது — என்னவோ சம்பளத்தில் 50 ரூபாய் கூடும் — அதற்கு ஆயிரம் செலவு வரும். முதலில் பாஷை தெரியாத ஊரிலே— பக்கத்து மனுஷாள் இல்லாத ஊரிலே போய் எப்படி குடியிருக்கிறது ?

சுந்த : என்ன இப்படி பேசுகிறாய் — டிப்டி கலெக்டர் சம்சாரம் என்றால் ஊரில் எவ்வளவு மதிப்பார்கள் அதிலும் தெலுங்கு நாட்டிலே உத்தியோகஸ்தர்களை ரொம்ப மதிப்பார்களாம்.

பார்வதி :—உங்க மதிப்பும் நீங்களும் — இந்த சுயராஜ்யம் வந்த பின்தான் உங்கள் மதிப்பு எல்லாம் கப்பலேறிவிட்டதே — அந்தக் காலத்தில் வெள்ளைக்காரன் ராஜ்யத்தில் இருந்தது மதிப்பு. கிராம முன்சீப் — கர்ணம் — வெட்டியான் தலையாரி எல்லாம் விழுந்து விழுந்து கும்பிடுவார்கள் — குடியானவர்களோ கேட்கவே வேண்டாம். அதிகாரி என்றால் கடவுள்தான் அவர்களுக்கு. இப்ப என்னடா என்றால் — தெருவிலே போகிற தோட்டி கூட முறைச்சுப் பார்க்கிறான் — மக்களோ மச்சினன் முறை கொண்டாடிக்கிட்டே வந்து விடுகிறார்கள்.

சுந்த. :—ஆமா — இதெல்லாம் விரும்பத் தக்கதுதானே 'எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு' என்ற பாரதி பாட்டுத்தான் தெரியுமே உனக்கு

பார்வதி ,—பாட்டு — கும்மிக்கு நல்லா இருக்கு வாழ்வுக்கு நல்லா இருக்கான்னு கேக்கிறேன். எல்லோரும் சமம் என்றால் — நம்ம மேலச் சேரி குப்பனை நம்ம வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ளலாமா ?

சுந்த. :—எய் — இப்படி எல்லாம் பேசாதே ; யார் காதிலாவது விழுந்து வைக்கப் போகிறது — நாங்கள் எல்லாம் ஹரிஜன முன்னேற்றம், ஹரிஜன முன்னேற்றம் என்று பிரமாதப் படுத்திக்கொண்டிருக்கிறோம் நீ என்னடா என்றால் — மேலச் சேரி குப்பனை அவ்வளவு கேவலமாகப் பேசுகிறாய்.

பார்வதி :—பேச்சுக்கென்ன ? சும்மா — வாய் வேதாந்தம் வேண்டுமானால் பேசலாம் — அவனோடு சம பந்தியில் உட்காரலாமா ? இல்லை கொள்வினை கொடுப்பினைதான் செய்ய முடியுமா ;

சுந்த. :—அதெல்லாம் வேண்டாம் — அவனை மனிதனாக மதிக்கலாம் அல்லவா. கிட்டவந்தால் எட்டிப்போ என்றாவது சொல்லாமல் இருக்கலாம் அல்லவா.

பார்வதி :—எது புது உத்தியோகம் வந்தாலும் வந்தது பெரிய காந்தி பக்தர் ஆகிவிட்டீர்கள் போலிருக்கிறதே. எப்படியும் போங்கள் — அடோனிக்கு நான் வரவில்லை — நான் வீடு வாசல் என்றிருக்கிறேன் — சுகமாகப் போய்விட்டு, பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து சீக்கிரம் இப்பக்கம் மாற்றிக் கொண்டு வாருங்கள் — இந்த சர்க்கார் கொடுக்கிற சம்பளம் ரயிலுக்கும் போர்ட்டருக்குமே காணாது

சுந்த. :—ஆமா. நீ சொல்வதும் சரிதான் — அடோனிக்கு நான் மட்டும் போய் வருகிறேன் சீக்கிரமே இப்பக்கம் மாற்றிக் கொண்டு வரவும் பார்க்கிறேன்

பார்வதி :—தனியாகவா போகிறீர்கள் — நம்ப சமையல்காரனையும் கூட்டிப்போங்கள் — அந்தத் தெலுங்கு ஜில்லாவிலே ஹோட்டல் கீட்டலிலே சாப்பிடவே முடியாதாமே.

சுந்த. :— ஏனும் — சமையல்காரன் கிமையல்காரன் என்றால் சிலவுதானே,

பார்வதி :— அதற்காக அந்த மிளகாயை அரைச்சு அரைச்சுக் கலக்கித் கொட்டும் அந்த ஊரிலேயே உங்களுக்கு சாப்பாடு ஒத்துவருமா? ஏதோ உடலைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டாமா போனபடியே திரும்பிவர வேண்டாமா? எனக்கென்னமோ ஒரே கவலையாயிருக்கு.

சுந்த. :—எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார்.

பார்வதி ;—அவர் தான் இருக்கவே இருக்கிறாரே — இங்கிருந்து அடோனிக்கு மாற்றுவார் — அங்கிருந்து விசாகப்பட்டிணத்துக்கு மாற்றுவார். 500 ரூபாய்க்கு சம்பளமே வாங்க கூடாது என்று உத்திரவு போடுவார் — அரிசி விலையையும் சாமான் விலைகளை மட்டும் ஏற்றிக்கொண்டே போவார்

சுந்த. :—ஏண்டி கடவுளைக் குறை சொல்றே — சுதந்திரம் வந்த புதிசிலே கொஞ்ச நாளைக்கு இப்படித்தான் இருக்கும்.

பார்வதி :—பின்னாலே இதுவே பழகிப் போயிடும். அப்படித் தானே. இப்போதே கடன் வாங்கிக் கடன் வாங்கி பழகிப் போயிட்டதே. அடோனி போவதற்கு கடன் வாங்க வேண்டாமா?

சுந்த. ,—எல்லாம் நீ தான் இருக்கிறே — குடும்பத் தலைவி நீ நினைத்தால் முடியாதா —

பார்வதி :— பிடித்தது சனி இந்தத் தங்கச் சங்கிலிக்கும்.
(போகிறார்கள் இருவரும்)

---

## காட்சி 8

இடம் :—டிப்டி கலெக்டர் ஆபீஸ்

நேரம் :—காலை 11 மணி

பாத்திரம் :—டிப்டி கலெக்டர் சுந்தரேசம் பிள்ளை
பியூன் — ரெட்டியார் —
பெண் — கிழவன் — ஹரிஜன்.

[அடோனிக்குப்போன டிப்டி மாற்றிக்கொண்டு தமிழ் நாட்டிற்கே வந்துவிடுகிறார். குலசேகர பட்டிணம் டிவிஷனில் வேலை ஏற்றிருக்கிறார் அவர் வந்து நாற்காலியில் உட்காருகிறார்.]

டிப்டி கலெக்டர் :—(பியூனைப்பார்த்து) வெளியிலேயாரோ நாலைந்து பேர் இருக்கிறார்கள் ஒருவர் ஒருவராய் உள்ளே அழைத்து வா.

(பியூன் போகிறான் — ஒருவர் உள்ளே வருகிறார்)

டிப்டி. :—வாருங்கள் வாருங்கள் ரெட்டியார் உட்காருங்கள் என்ன இப்படி இவ்வளவு தூரம் வந்தது

ரெட்டியார் :—ஒன்றுமில்லை — என் நிலத்தில் பம்பு செட் வைக்க லோன் கேட்டு மனுப் போட்டிருந்தேன் மூன்று மாதம் ஆகிவிட்டது — அதான் என்ன என்று கேட்டுவிட்டுப் போகலாமா என்று வந்தேன்.

டிப்டி :—லோன் மனுவா? — தாசில்தாருக்கு விசாரணைக்குப் போயிருக்கும் — வரட்டும் பாக்கிறேன்.

ரெட்டியார் :—இல்லை தாசில்தாரிடமிருந்து ரிப்போர்ட் எல்லாம் வந்து விட்டது. தங்கள் ஆபீசிற்கு வந்து இரண்டு மூன்று நாள் ஆகிவிட்டது

டிப்டி. :—ஓ. வந்து விட்டதா — அதை உடனே கவனிக்கிறேன்.

ரெட்டியார் :—ஒன்றுமில்லை — தாசில்தார் ஏதோ ஜாமீன் காட்டியிருக்கும் நிலம் போதுமான மதிப்புடையது இல்லை என்று எழுதியிருக்கிறாராம். நான் பத்து வருஷத்திற்கு முன் ரூ. 500-க்கு வாங்கி கிணறுவெட்டி நன்றாய் திருத்தி நன்செய் பயிரே செய்து வருகிறேன்.

டிப்டி. :—இப்போ கடன் எவ்வளவு கேட்டிருக்கிறீர்கள்.

ரெட்டியார் :—சின்னத் தொகைதான் — ஒரு இரண்டாயிரம்.

டிப்டி. —இரண்டாயிரம் கடன் கொடுக்க நாலாயிரம் மதிப்பிருக்க வேண்டுமே — இவ்வளவு மதிப்பு இருக்குமா?

ரெட்டியார் :—அதற்குத்தானே இங்கே வந்திருக்கிறேன்

டிப்டி. :—சரி பேப்பரைப் பார்த்து செய்யக் கூடியதைச் செய்கிறேன்.

ரெட்டியார் :—சென்ற வாரம் சென்னைக்கு போயிருந்தேன் மந்திரி அவர்களைக் கூடப் பார்த்தேன் — உங்களுக்குத்தான் தெரியுமே அவர்கள் எனக்கு நெருங்கிய உறவு என்று — தங்களைப்பற்றி யெல்லாம் பேச்சு வந்தது — ரொம்ப நல்லவர் எங்கள் டிப்டி கலெக்டர் என்றெல்லாம் சொன்னேன்.

டிப்டி :—ரொம்ப சந்தோஷம் — தங்கள் மனுவைக் கவனிக்கிறேன்.

ரெட்டியார் :—உடனடியாக கவனிக்கவேணும் — எப்படியும் லோன் சாங்ஷன் செய்து விடவேண்டும் திரும்பவும் வருகிறேன் — நமஸ்காரம்.

டிப்டி :—அடுத்த ஆளைக்கூப்பிடு

(ஒரு பெண் வருகிறாள்)

என்ன அம்மா — என்ன வேணும்

பெண் :—(மனுவைக் கொடுத்து) எல்லாம் மனுவில் சொல்லியிருக்கிறேன் படிச்சுப் பாருங்கள்.

டிப்டி :—படிக்கிறார் — என்னம்மா மனுவில் ஒண்ணுமே படிக்க முடியலையே — இது தமிழில்தானா எழுதியிருக்கிறது.

பெண் :—ஆமா — நம்ம கோட்டை வாசலில் இருக்கிறாரே அவர்தான் எழுதிக்கொடுத்தாரு. எழுதுவதற்கு ஒரு ரூபாய் கூட கொடுத்தேன்.

டிப்டி :—சரி அது கிடக்கட்டும் — என்ன விஷயம் சொல்லுங்கள்.

பெண் :—அதுவா — நான் ஒரு நிலத்தை கிரயம் வாங்கினேன் — வாங்கி ஆறு மாதம் ஆச்சு என் பெயருக்கு பட்டா மாத்தனும்.

டிப்டி ;—பட்டா மாற்றுதலுக்கு தாலுகா ஆபிசிற்கல்லவா போகணும் — அங்கு மனுப்போட்டீர்களா ?

பெண் :—மனு எல்லாம் போட்டிருக்கிறேன் — என்னாலே அங்கு எல்லாம் போக முடியலே — அடுத்த வீட்டுப்பையன்

சொன்னான் எல்லாம் கலெக்டரிடம் மனுக்கொடு அவர் கவனிப்பார் என்று

டிப்டி :—தங்கள் மனுவை தாசில்தாருக்கு அனுப்புகிறேன். சீக்கிரம் விசாரித்து உத்திரவு போடச் சொல்லி எழுதுகிறேன்.

பெண் :—நீங்கள் மகராஜனா இருக்கணும் (போகிறாள்)

டிப்டி :—அடுத்த ஆளைக் கூப்பிடு

(ஒரு குடு குடு கிழவன் வருகிறான்)

கிழவன் :—சாமி ஒரு விண்ணப்பமுங்க

டிப்டி :—என்ன பெரியவரே — என்ன விஷயம்

கிழவன் :—(கொஞ்சம் காது மந்தம்) — உரக்கச் சொல்லுங்க (அதற்குள் பியூன்—என்ன விஷயம் என்று கேட்கிறாங்க.) விஷயமா என் நிலத்தை ஒட்டி சர்க்கார் புறம்போக்கு இருக்கிறது அதில் நான் சாகுபடி பண்ணியிருக்கிறேன் அதற்கு தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். அதை ரத்து பண்ணணும்; நிலத்தையும் எனக்கு ஜாரி செய்யணும்.

டிப்டி :—ஆமா — அது என்ன புறம்போக்கு? எவ்வளவு நிலம்? (பியூனிடம்) கேளப்பா அவரிடம்.

பியூன் :—உரக்க — என்ன புறம்போக்கு எவ்வளவு நிலம் என்று சேக்கிறாங்கோ—

கிழவன் :—அதுவா ஏரி புறம்போக்கு — சும்மா ஒன்றரை ஏக்கர் நிலம்.

டிப்டி :—ஏரி என்றால் — ஆக்ஷேபகரமாச்சே—இந்த வயசிலே காடு வாவா வீடு போபோ என்கிற நேரத்திலே, ஏன் இந்த மண்ணாசை ? ஜாரி பண்ண முடியும் என்று தோன்றவில்லையே.

கிழவன் :—அப்படிச் சொல்லாதிங்க எப்படியும் ஜாரி பண்ணிடணும். அப்படித்தான் நான் செத்தாலும் என் நெஞ்சு வேகும்.

டிப்டி :—(aside) சாகிற ஆளுக்கு வேண்டியதெல்லாம் ஆறடி மண் தானே அய்யா — சரி பார்க்கிறேன் (பியூனிடம்) பார்த்துச் செய்கிறேன் என்று சொல்லி அனுப்பச் சொல் அடுத்த ஆளைக் கூப்பிடு (ஒரு ஹரிஜன் வருகிறான்.)

டிப்டி :—உனக்கு என்னப்பா வேணும்?

ஹரிஜன் :—எனக்கா வீடு கட்ட மனை வேணும்; உழுவதற்கு நிலம் வேணும் — உழவுக்கு மாடு வேணும்.

டிப்டி :—என்ன மனுப்போட்டிருக்கிறயா !

ஹரிஜன் :—மனுக் கொடுக்கத்தான் வந்திருக்கிறேன். எங்கள் ஊரில் மணியகாரரும் கணக்கப் பிள்ளையும் எங்களை குடியிருக்கவே விடுகிறதில்லை. நான்குடியிருக்கும் மனை பெரிய நாய்க்கர் மனையாம் — காலி பண்ணனும் என்று நெருக்குகிறார்கள் — எனக்கோ சாப்பாட்டிற்கு வகை இல்லை— உழுது பயிரிடவோ நிலம் இல்லை. உழுவதற்கோ மாடுகள் இல்லை.

டிப்டி :—ஆமா — நிலம்தான் இல்லையே — மாடு எதற்கு இப்போது.

உறரிஜன் ;—மாடு இருந்தால் அடுத்த நிலங்களையாவது உழுது பயிரிட்டு ஜீவிக்கலாம் அல்லவா இப்பத்தான் மிராசுதார் எல்லாம் மாடு வாங்கிக் கொடுக்கிறதில்லையே.

டிப்டி ;—நீ அவர்களிடம் எல்லாம் சரியாய் நடந்து கொள்ளணும்

உறரிஜன் .—என்ன சரியாய் நடந்துகொள்கிறது? எல்லாம் அடிமையாய் இருக்கச் சொல்கிறார்கள் எத்தனை நாளைக்கு இப்படி அடிமையாகவே கிடப்பது.

டிப்டி :—சரி சரி — உன் விஷயத்தை கவனிக்கிறேன் உங்களுக்கு வேண்டிய காரியங்களை எல்லாம் கவனிக்க ஒரு தனி டிப்டி கலெக்டர், டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீஸர் என்று ஒருவர் இருக்கிறாரே தெரியுமா அவருக்கு அனுப்பி பார்க்கச் செய்கிறேன்.

உறரிஜன் :—யாருக்கு அனுயபுவீர்களோ — சீக்கிரம் காரியம் நடக்கணும் நான் போய் வரேனுங்க.

பியூன் :—பயலுக்கு இருக்கிற அகம்பாவத்தை பார்த்திங்களா ?

டிப்டி .—அகம்பாவம் இல்லைடா — உரிமையை கேட்கிறான் உரிமையை நிலை நாட்ட இவ்வளவு தெம்பு இருக்கிறதே அதை பாராட்டுகிறேன் — உரிமையைக் கேட்பது போல் அவரவர்கள் கடமைகளையும் உணர்ந்து நடந்து கொண்டால் அதுபோதும் நாடு எவ்வளவோ முன்னேறிவிடும் — அந்த நாள் வந்து கொண்டே இருக்கிறது.

## பத்து வருஷம் கழிகிறது

**டிப்டி கலெக்டர் சுந்தரேசன் கலெக்டர் ஆகிறார் 1957-ல்**

### காட்சி 9

இடம் :—*கலெக்டர் ஆபிஸ் காம்பவுண்டு*

நேரம் :—*காலை 9 மணி*

பாத்திரம் :—*கலெக்டர் சுந்தரேசன்*

*என். ஜி ஒ. சங்கக் காரியதரிசி*

*என். ஜி. ஒ. அங்கத்தினர்கள்*

---

[*என். ஜி. ஒ. அசோசியேசன் — ஆண்டு விழா கலெக்டர் சுந்தரேசன் பிள்ளை தலைமையில் நடக்கிறது*]

நிகழ்ச்சி :—*முதலில் இறை வணக்கம் (பாடல்) வரவேற்புரையை — காரியதரிசி வாசிக்கிறார்.*

*அன்பும் அறிவும் ஆற்றலும் நிறைந்த மாவட்டத் தண்டல் நாயகம் அவர்களே ! இன்று எங்கள் சங்கத்தின் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்க இசைந்து இங்கு நீங்கள் எழுந்தருளியதற்கு நாங்கள் மிகுந்த நன்றி உடையவர்களாக இருக்கிறோம். எங்கள் குறைகளை எல்லாம் தாங்கள் அறிவீர்கள். என்றாலும் எத்தனையோ முறைஎப்படி எப்படியோ அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியும் சரியான பரிகாரம் ஒன்றும் கிடைக்காததால் திரும்பவும் தங்கள் மூலம் எடுத்துச் சொல்லிப் பரிகாரம் தேட விரும்புகின்றோம். செவி சாய்த்து கேட்டருள வேண்டுகிறோம்*

*உணவுப் பொருள்களின் விலை எல்லாம் ஒன்றுக்குப் பத்தாய் ஏறிக்கொண்டே போகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் எங்களது ஊதியமோ இருந்த நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. ஏதோ பஞ்சப் படி என்று கொஞ்சம் கொஞ்சம் அப்போதைக்கப்போது இந்த அரசாங்கத்தார் கொடுத்தாலும் அதைவைத்துக்*

கொண்டு எங்கள் வீட்டுச் செலவை சரிகட்ட முடியவில்லை. சம்பளம் வளராவிட்டாலும் பிள்ளைகள் மட்டும் பெருகிக் கொண்டே போகிறது. முதலில் இந்தப் பஞ்சப்படியையும் எங்களின் நிரந்தர சம்பளமாகவே ஆக்கிவிடவேணும் மேலும் இந்திய சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு விகிதமும் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு விகிதமும் ஆக இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. அதற்காக எங்கள் நிலைக்கு இந்திய சர்க்கார் ஊழியர்களைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று விரும்பவில்லை. எங்களையும் அவர்கள் நிலைக்கு உயர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறோம். வேலைத்தரத்திலோ அல்லது உழைப்பதிலோ நாங்கள் அவர்களுக்கு கொஞ்சமும் சளைத்தவர் அல்லவே. எங்கள் சங்கம் ஆரம்பித்து பதினேறு வருஷங்கள் ஆகின்றன. 2151 அங்கத்தினர்கள் இந்த மாவட்ட முழுவதும் இருக்கிறோம், இதன் கிளைஸ்தாபனமாக அஸ்திவார உத்தியோகஸ்தரின் அருமை மனைவியர் சங்கம் வேறே தனியே இயங்கிக் கொண்டிருக்கிறது. நாங்கள் பணி முடக்கம் செய்ய முனையாவிட்டாலும் எங்கள் துணைவியர் பணி முடக்கம் செய்ய முனைந்துவிட்டார்கள் என்றால் எங்களால் ஒன்றுமே செய்ய இயலாது போய்விடும் என்பதைமட்டும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆதலால் தண்டல் நாயகமவர்களே தாங்கள் கருணை கூர்ந்து எங்கள் அவல நிலையை அரசாங்கத்தாருக்கு எடுத்துச்சொல்லி ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம். இது வரை எங்கள் ஆண்டு விழாவிற்கு அமைச்சர்களையே அழைத்து அமர்த்தி குறைகளைச் சொன்னோம். ஒன்றும நடைபெறவில்லை — இனி நீங்கள்தான் எங்களுக்குத் துணை நிற்கவேண்டும்.

இப்படிக்குத்

தங்கள் அன்பும் பணிவுமுள்ள

அஸ்திவார உத்தியோகஸ்தர்கள்.

தலைவர் — கலெக்டர் சுந்தரேசன் உரை :—

அன்புள்ள தோழர்களே !

என்னை உங்கள் சங்க ஆண்டு விழாவிற்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டதற்கு மிக்க நன்றி உடையவனாக இருக்கிறேன். உங்கள் குறைகளை எல்லாம் நான் அறியாதவனல்ல. நானும் அஸ்திவார உத்தியோகஸ்தனாக இருந்தவன்தானே. அன்று நான் ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த போது எங்கள் வீட்டில் இருந்த செழிப்பு — இன்று ஆயிரம் ரூபாய் வாங்கும் போது இல்லை — அப்படி விலை வாசிகள் ஏறிப்போய் இருக்கின்றன — தேவைகள் அதிகப்பட்டுப் போயிருக்கின்றன. மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் — ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பளம் பஞ்சப்படி விகிதாசாரத்தில் எல்லாம் வேற்றுமை இருப்பது வருந்தத் தக்கதே — அவர்கள் பெறும்ஊதிய அளவிற்கு உயர்த்த வேண்டுவது அவசியமே. இதை நமது நாட்டின் மா பெருந் தலைவர் இந்திய நாட்டின் முடி சூடா மன்னர் — பண்டித ஜவஹர்லால் நேருவே அடிக்கடி சொல்லி வந்திருக்கிறார். அத்துடன் நமது பிரதம மந்திரி திரு. காமராஜ் அவர்கள் ரிவின்யூ அமைச்சர் திரு. மாணிக்க வேலு அவர்கள் எல்லாம் உங்கள் நிலையினை நன்கு உணர்ந்தவர்களே. விரைவிலேயே கவனிப்பார்கள். உஙகளது மனைவியரும் இப்போது முனைந்து நிற்கிறார்கள். ஆதலால், இனி வெற்றி உங்களுக்குத்தான். உங்கள் முயற்சிக்கெல்லாம் என் பரிபூர்ண ஆசி.

அன்பர்களே ! இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொண்டு உங்களுக்கு ஒரு சில வார்த்தைகள் உளம்திறந்து சொல்ல விருப்பம். இருபது வருஷத்திற்கு முன் இருந்த சர்க்கார் வேலையும் இன்று நடக்கும் சர்க்கார் வேலையும் ஒன்றல்ல. அன்று நாமெல்லாம் சர்க்கார் அதிகாரிகள். ஆம். வெள்ளைக்காரர் ராஜ்யத்திலே நாமெல்லாம் மக்களை ஆட்டிப் படைக்கும் அதிகாரிகளாக இருந்தோம். ஆனால் இப்போது சுதந்திர இந்தியாவில் இருக்கிறோம் — புதிய சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம் எல்லோரும் இன்று மக்கள் ஆட்சி, மக்களுக்காக ஆட்சி

மக்களால் ஆட்சி என்பதை அறிவீர்கள் — ஆகவேதான் மக்கள் எல்லோருமே இந்நாட்டு மன்னர்கள் — அந்த மன்னர்களின் ஊழியர்களாக நாம் பணிபுரிகிறோம். ஆம் இன்றுதான் நாம் உண்மையிலேயே சர்க்கார் சேவகர்கள் அன்று அன்னியனுக்கு அடிபணிந்து அடிமை வாழ்வு வாழ்ந்தோம். இன்று மக்களின் கட்டளைகளை எதிர்நோக்கி அவர்களுக்கு வேண்டுவன எல்லாம் செய்து பணியாற்ற முனைந்திருக்கிறோம். நமது வேலையில் ஏற்பட்டிருக்கும் இந்தஒரு மாறுதலை மட்டும் நாம் உணர்ந்து அதன்படி நடக்கத்தெரிந்து கொள்ளவேண்டும். நம்மில் பலர் இதை உணர்ந்து கொள்ளவில்லை. காலம் மாறிப்போச்சு. எல்லோருடைய வாழ்விலும் துறையிலும், காலத்துக்கேற்ற வாறு நடந்து நல்ல பெயர் பெறவேண்டுவதே உங்கள் லக்ஷியமாக இருக்கவேண்டும். மன்னராம் மக்களுக்கு சேவை செய்து ஒரு சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதில் நாமும் பங்குபெறவேண்டும்.

எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வம்
எய்தலாலே

இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை

என்று அன்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் கண்ட சர்வ ஜன லக்ஷிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு நாமும் கொஞ்சம் நம் வாழ்வில் சில தேவைகளை எல்லாம் தியாகம் செய்ய வேண்டும். சுதந்திரம் பெறுவதற்கு தியாக வேள்வியில் குதித்தவர்களை எல்லாம் இன்று தியாகிகள் என்று மக்கள் போற்றவில்லையா? அதே போல, இன்று வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி வாழ்ந்து உண்மையிலேயே சர்க்காருக்கு சேவை செய்யும் உங்களையும் ஒரு நாள் தியாகிகள் என்றே அழைப்பார்கள், தியாகச் சின்னங்கள் நிறுவுவார்கள் — அந்த நன்னாளை எதிர்நோக்கி நல்ல முறையிலே உங்களது பணிகளை எல்லாம் செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். உங்களது வாழ்வு சிறக்க இறை அருளை இறைஞ்சுகின்றேன், வணக்கம்

(கைதட்டல்)

காரியதரிசியின் வந்தனோபசாரம் :—

அன்பர்களே! நமது மாவட்டத் தண்டல் நாயகம் அவர்கள் நல்ல பேச்சாளர் — ஆதலால் நாம் கேட்டதை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு நாம் எப்படி வாழவேண்டும் என்பதை விரிவாகப் பேசி விடைபெற்றுக் கொண்டார்கள். மக்களே மன்னர்களாகிவிட்டார்கள். நாம் இந்த மன்னர்கள் சொல்கிறபடி அவர்களுக்கு சேவை செய்யத்தயாராக இருக்கிறோம். ஆனால் இன்று இந்த மன்னர்களுக்கு மேலே மகா மன்னர்கள் — சக்ரவர்த்திகள் இருக்கிறார்களே ஒவ்வொரு கிராமத்திலும் அவர்களைப் பற்றித் நம் தலைவர் அவர்கள் சொல்லவில்லையே. மன்னர்களாலே நமக்குத் தொல்லையில்லை மந்திரிகளாலே நமக்கு கஷ்டமில்லை. ஆனால் இந்த மகா மன்னர்களாலேதான் கஷ்டம்; தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் தடி எடுக்காமலே பல தண்டல் நாயகர்கள் கிளம்பி விடுகிறார்களே. இவர்கள் எந்த லக்ஷிய சமுதாயத்தை உருவாக்குகிறார்கள். உண்மையிலேயே நாம்தான் சர்வஜன லக்ஷிய சமுதாயத்தை உருவாக்குகிறவர்கள். நம்மிடையே, உள்ளவர்களே கிடையாது, எல்லோருமே இல்லாதவர்கள்தான் — எல்லோருமே இல்லாதவர்களாக மாறிவிட்டால்-பொது உடைமைச் சமுதாயம் விரைவிலேயே வந்து விடாதா ?

அன்பர்களே : நம் தலைவர் அவர்கள் சொன்னதை எல்லாம் நாம் கேட்டு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பழுத்த அனுபவத்தின் பேரில் பேசுகிறவர்கள் அவர்கள். அவர் எவ்வளவோ வேலைகளுக்களுக்கிடையே நம் சங்கத்திற்கு வந்து கௌரவித்து தலைமை தாங்கி நடத்தி கொடுத்ததற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் — எல்லோருக்கும் என் வணக்கம்.

[விழா முடிகிறது — தலைவரும் — காரியதரிசியும் மட்டும் தனித்து வெளியே வருகிறார்கள்]

தலைவர் :—என்ன தம்பி ! பெரும் போடு போட்டு விட்டாய்

காரியதரிசி :—ஒன்றும் இல்லையே உங்களை ஒட்டித்தானே பேசினேன்.

தலைவர் :—அது சரிதான் — மன்னர் — மகாமன்னர் என்றெல்லாம் போடுபோடென்று போட்டு விட்டாயே.

காரியதரிசி :—ஒன்றுமில்லை — இன்று மன்னரால் — மந்திரிகளால் சாதிக்க முடியாததை எல்லாம்தான் இந்த மகாமன்னர்கள் சாதிக்கிறார்களே.

தலைவர் :—அப்படி என்ன சாதித்து விடுகிறார்கள்.

காரியதரிசி :—அதையா கேட்கிறீர்கள் — உங்களுக்கு தெரியுமோ தெரியாதோ இப்போதெல்லாம் எதற்கெடுத்தாலும் சென்னைக்கு காவடி எடுக்க வேண்டும் என்று. நமது ஊழியர்கள் எடுக்காத காவடியே இல்லையே. அந்தக் காவடிக்கெல்லாம் இந்த மகாமன்னர்கள் உதவி மிக்க தேவையாக இருக்கிறதே.

தலைவர் :—அப்படிக்காவடி எடுப்பவர்கள் யார்—நீங்கள் தானே? ஏதோ கஷ்டம் என்கிறீர்கள் பின்னும் ஓடி ஓடிப் போகிறீர்கள் — சென்னைக்கு.

காரியதரிசி :—மன்னிக்க வேண்டும். இப்போதெல்லாம் ஓட்டப்பந்தயம் மும்முரம் இன்று நடந்த விளையாட்டுப் போட்டியில் ஓடினார்களே அதெல்லாம் இதற்கு எம்மாத்திரம் — ஓட்டத்தில் ஜெயம்தான் கிட்டுகிறதில்லை — அதுதான் கஷ்டம்.

தலைவர் :—இப்படியெல்லாம் மனம்நொந்து பேசக்கூடாது — எல்லாவற்றிக்கும் கடவுள் இருக்கிறார் என்று அவர் தலையில் பாரத்தைப் போட்டு அமைதியாக இருக்க வேண்டும் தம்பி — நான் வருகிறேன்.

காரியதரிசி :—ஆமா. இந்தவேதாந்தம் எல்லாம் 50 வயதிற்கு மேல் இப்போ வீட்டில் குழந்தை குட்டிகள் பிச்சுப் பிடுங்குகிறதே — அங்கே இந்தவேதாந்தம் எல்லாம்பயன் படவாபோகிறது:

## காட்சி—10.

இடம்:—ஆபீஸர்ஸ் கிளப்

நேரம்:—மாலை

பாத்திரம்:—சந்திரசேகரன் — சப்கலெக்டர் சிங்.

சந்திரசேகரன்:—(ஒரு உத்தியோகஸ்தர்)
என்ன மிஸ்டர் சிங்—சௌக்கியமா?

சப் கலெக்டர் சிங்:—ஆமா சௌக்கியந்தான்.

சுந்திர:—என்ன ஜோராய் தமிழ்ப் பேசுகிறாயே.

சப் கலெ:—உங்களோடு 7, 8 மாதங்கள் தங்கி உங்கள் ஊர் தண்ணீர் குடித்து விட்டேன் அல்லவா.

சுந்திர:—உன்னை வட நாட்டான் என்கிறார்கள்—எந்தக் கூட்டத்திலும் உன் தலைப்பாகையும்—உன் தாடியும் இனம் காட்டிக் கொடுத்து விடுகிறதே

சப் கலெ:—தாடியும் தலைப்பாகையும் எங்களுடன் கூட பிறந்தாயிற்றே—என் தலை போனாலும்; இல்லை—தலைப்பாகை போனாலும் தாடி போகாது சார்.

சுந்திர:—பேஷ் பேஷ் — சக்கைப் போடு போடுகிறாயே. 20 வருஷத்திற்கு முன்பு வெள்ளைக்காரன் இங்கு சப் கலெக்டராக வந்தான்—புல்லை எல்லாம் நெல் என்று எழுதினான் — இங்குள்ளவர்களை எல்லாம் விரட்டு விரட்டு என்று விரட்டினான் —ஆனால் இன்றோ—பஞ்சாபிலிருந்து ஒரு சிங்கம் சப் கலெக்டராக வந்திருக்கிறது. அது என்னடா என்றால் அடங்கி ஒடுங்கிப் பேசுகிறது.

சிங்:—I am thankful for the good sentiments expressed.

சந்திர:—என்ன இங்கிலீஷில் ஆரம்பித்து விட்டாய் இங்கிலீஷ்காரன்கள் கப்பலேறிப்போய் விட்டானே.

சிங்:—அவன் போனாலும் அவன் பாஷை போகலியே—அவன் அணிந்த கால் குழாய் போகலியே.

சந்திர:—அது எப்படிப் போகும்—இப்போதெல்லாம் மேல் நாட்டு உடைகளில்த்தானே மோகம் அதிகம்—அது கிடக்கட்டும்—நீ யென்ன இரண்டு மூன்று வருஷம் கழிந்ததும் திரும்பி உங்கள் ஊருக்கு போய்விடுவாயா ?

சிங்:—Why should I go? I have come here to serve you all. I like this part of India and its people.

Sundaresan:—Very Good, Very Good. I am glad that you stopped with saying that you liked our Tamil Nad and its people. You did not say that you like our girls.

Sub-Collector:—In fact I like your girls and love them too

சந்திர:—எது? ஆபத்து வந்து விட்டதே—இங்கு வந்து ஒரு பெண்ணை அடித்துக் கொண்டு போகலாம் என்று பார்க்கிறாயா?

Sub-Col:—No. No. Don't mistake me. I love them all. They are so beautiful.

சந்திர:—சரிதான்—உன்னை இங்கேயே நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றால் உனக்கு ஒரு தமிழ் பெண்ணைப் பார்க்க வேண்டியதுதான் அன்று கவிஞன் பாரதி.

சிந்து நதியின் மிசை நிலவினிலே
    சேரநன் நாட்டு இளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
    தோணிகள் ஓட்டி விளையாடிவருவோம்

என்று பாடினான். நீ என்னடா என்றால்—சிந்து நாட்டிலிருந்து இங்கு வந்து—தமிழ்ப் பெண்ணோடு பாலாற்றில் தோணி விட வேண்டுமென்கிறாய்—போடு சக்கை.

சிங்;—பாலாற்றில்தான் தண்ணீரே கிடையாதே—மணலில் தான் தோணி விடணும்.

சந்திர:—சரி எப்படியாவது நீயும் நானும் இணைந்தால் சரி நமக்குள் எத்தனை பேதம் இருதாலும் நாம் சொந்த சகோதரர் அல்லவா? நாம் இணைந்தால்—நாடு முன்னேறும் நம்மைப் போன்ற சர்க்கர் அதிகாரிகள் உண்மையாகவே சேவகர்களாக மாறினால்—லக்ஷிய சமுதாயமே உருவாகும்.

சப் கலெக்:—அந்த நல்ல நாளையே எதிர் பார்ப்போம்.

விக்டோரியா பிரஸ், வேலூர்.— தாள் 300.